بسم الله الر حمن الرحيم

# சுவனப் பாதை

ஈருலக வெற்றியின் வழிகாட்டி

வெளியீடு: இஸ்லாமிய அழைப்பகம், ஜித்தா (ஸனாய்யியா) இதழ்: 2:8, ஜமாத்துல் அவ்வல், 1427, பக்கங்கள்-12

P.O.Box-32628, Jeddah-21438, E-Mail : suvanam@gmail.com

## கல்லூரியில் கற்கும் காலம் பொற்காலம்

*- M. ஜமீலா B.A*

***அஸ்மா அரபிக் கல்லூரி, ஏர்வாடி***

கல்லூரி என்பது ஒரு சுதந்திரமான வேடந்தாங்கல் போன்றதாகும். அங்கு கற்கும் மாணவ, மாணவிகள் பறவைகள் போலாவார்கள். பல்வேறு இடங்களில் இருந்து ஒன்று கூடும் அந்தப் பறவைகள் எந்த ஒரு கவலையுமின்றி சந்தோஷமாக வாழ்கின்றன. அது போலதான் மாணவ, மாணவிகள்.

எங்கும் காணமுடியாத ஓர் உறவு ஒற்றுமையை இங்கே காணமுடியும். மாணவ, மாணவிகளின் ஒற்றுமையில் தான் பலவித அற்புதங்களை காண முடியும். ஒரு மாணவனுக்கு அநீதி இழைக்கப்பட்டால் கன்னியாகுமரி முதல் காஷ்மீர் வரை உள்ள ஒற்றுமையை இவர்கள் மூலம் பார்க்கலாம். மாணவர்களின் சக்திக்கு முன்னால் இவ்வுலக சக்திகள் யாவும் எடுபடாது.

இன்றைய மாணவர்கள் நாளைய தலைவர்கள், இவ்வாறு சிறந்த தகுதியுள்ள மாணவ, மாணவியர்கள் தன்னுடைய இளமை பருவ காலத்தை வீணாக்கக் கூடியவர்களாக இருக்கின்றனர்.

இறைவன் தன் திருமறையில்,

**“காலத்தின் மீது சத்தியமாக மனிதன் நஷ்டத்தில் இருக்கிறான்”**

***(அல்-குர்ஆன் 103: 1,2)***

காலத்தைப் பற்றி இவ்வுலகில் பல வர்ணிப்புகள் உள்ளன. உதாரணத்திற்கு “காலம் பொன் போன்றது” என்று வர்ணிக்கிறான். ஆனால் பொன்னை விட மிக மதிப்புள்ளது காலம், ஏனெனில் இவ்வுலகில் உள்ள உயர்ந்த பொருட்களை மனிதன் வசப்படுத்திக் கொள்கிறான். ஆனால் தன் வாழ்நாளில் கடந்து சென்ற ஒரு நிமிட காலத்தை அவன் திரும்ப பெறவே முடியாது. இவ்வாறு சிறப்புமிக்க காலத்தில் மனிதனுக்கு குழந்தைப் பருவம், இளமைப் பருவம், முதுமைப் பருவம் என்று மூன்று நிலைகளை ஏற்படுத்தியுள்ளான். இதில் இளமைக்காலத்தை இறைவன் பொற்காலமாக ஆக்கித் தந்துள்ளான், ஏனெனில் இக்கால கட்டத்தில்தான் மனிதர்கள் ஆரோக்கியமாகவும், எந்த ஒரு காரியத்திலும் சுறுசுறுப்பாகவும், புதிய விஷயங்களை கற்றுக் கொள்ளும் வேகத்தையும், அறிவையும் பெற்று இருக்கிறார்கள்.

அதே நேரத்தில் மாணவ, மாணவியர்களில் சிலர் நாகரீகம் என்ற பெயரில் கலாச்சாரச் சீரழிவில் சிக்கி நாசமடைந்து கொண்டிருக்கின்றனர். மற்றொரு சாரார் ஏதோ படிக்க வந்தோம் படித்தோம் என்று எவ்வித குறிக்கோள்களும் இல்லாமல் சோம்பேறித்தனமாய் இருக்கின்றார்கள். இவ்வாறு நாம் எந்த நோக்கத்திற்காக வாழ்கின்றோம், எதை நோக்கிச் செல்கின்றோம் என்று புரியாமல் இளமையான தன் பொற்காலங்களை வீணாக்கி கொண்டிருக்கிறார்கள்.

இன்னும் எவ்வளவுதான் மேதைகளாக இருந்தாலும் இஸ்லாத்தினுடைய கோட்பாடுகளை அவர்கள் அறியவில்லையென்றால் அவர்களின் வாழ்க்கை கேள்விக்குறியாகவே இருக்கும். உலகின் சிறந்த மனிதரான நபி(ஸல்) அவர்கள் கூறுகிறார்கள். “ஆதமுடைய மகன்

***(தொடர்ச்சி 2–ஆம் பக்கம் பார்க்க..)***

**அறிவிப்பு**

**சுவனப்பாதை நடத்திய “மாபெரும் எழுத்துலகப் புரட்சிப் போட்டியின் முடிவுகள் எதிர்வரும் இதழில்**

**(இன்ஷாஅல்லாஹ்)**

### உள்ளே

**குர்ஆனில் கருவளர்ச்சி - 3**
**ஆதாமின் மகனே - 6**
**உங்களுக்குத் தெரியுமா? - 7**
**ஜனாஸாவின் சட்டங்கள் - 8**
**இந்து மதத்திலிருந்து.. - 10**
**குறுக்கெழுத்துப் போட்டி- 12**

## லேபர் லா– அமலாக்கம்

***–மணவை. அஜீஸ். M.A***

சவூதி அரேபியாவின் திருத்தியமைக்கப்பட்ட புதிய லேபர் லா(தொழிலாளர் சட்டங்கள்) அமலாக்கம்.

கடந்த ஏப்ரல் மாதம் 2006, சவூதி அரேபியாவின் புதிய திருத்தி அமைக்கப்பட்ட தொழிலாளர் சட்டங்கள் அமலுக்கு வந்தன. இந்த புதிய லேபர் லா – வின் மூலம் வெளிநாட்டு தொழிலாளர்கள் மிகவும் பாதுகாக்கப்படுவார்கள் என்று நம்பப்படுகிறது. புதிய லேபர் லா-வின் சில அம்சங்கள் பின்வருமாறு.

வெளிநாட்டு பணியாளர்கள் அவர்கள் ஒரு நிறுவனத்தில் பணியில் சேரும் வரையிலான செலவுகள், இகாமா புதுப்பித்தல், வொர்க் பர்மிட் மற்றும் அதைக் குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் புதிப்பிக்கத் தவறினால் அதற்கான தண்டத் தொகை போன்ற அனைத்தும் வெளிநாட்டு பணியாளர்களைச் சார்ந்தது ஆகும். இதற்கான செலவுகளை நிறுவனம் பொறுப்பேற்காது.

ஒரு நிறுவனத்திலிருந்து மற்றொரு நிறுவனத்திற்கு மாறும் பொழுது (Sponcership Transfer) அதற்கான செலவுகளை புதிய நிறுவனம் ஏற்றுக்கொள்ளும்.

வெளிநாட்டு தொழிலாளர்கள் இங்கு இறந்துவிட்டால், அவர்கள் உடல்களை சொந்த நாட்டிற்கு அனுப்பும் செலவு நிறுவனத்தைச் சார்ந்தது. இது குறித்து அவர்களின் ஒப்பந்தத்தில் முன்கூட்டியே கையெழுத்திட்டிருக்க வேண்டும்.

***(தொடர்ச்சி – 5 ஆம் பக்கம் பார்க்க..)***

*( முதல் பக்கத் தொடர்ச்சி – கல்லூரி.)*

இரண்டு விஷயத்தில் அலட்சியமாக இருக்கிறான். 1) ஆரோக்கியம் 2) அவனுடைய வாழ்நாள் என்றார்கள்."

***ஆதாரம்: புகாரி***

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்ற பழமொழி தான் பெரும்பாலும் இன்று இஸ்லாமிய சமுதாய மாணவ, மாணவிகளிடம் பிரபலமாக உள்ளது. ஆனால் அதைவிட இறைவனும், நம் தூதர் முஹம்மது(ஸல்) அவர்களும் மனிதர்கள் தன் நிலைகளை எண்ணி சிந்திக்கும் விதமாக அழகாக கூறி விழிப்படையச் செய்கிறார்கள் என்பதனை இன்று எத்தனை மாணவ, மாணவிகள் அறிவார்கள்?

கல்லூரியில் கற்கும் பொற்காலங்களில் சிலர் சிகரெட், கஞ்சா, மது போன்ற போதை பொருட்களுக்கு அடிமையாகின்றனர். இதற்கு அவர்கள் சொல்லும் காரணமோ பொழுது போக்கிற்காகவும், தன் நண்பர்கள் முன் நான் மட்டும் உபயோகிக்காமலிருந்தால் தனக்கு கேவலம் என்றும், மனக்கவலைகளை மறக்க என்றும் பல்வேறு அற்பமான காரணங்களை முன் வைக்கின்றனர்.

புகையிலை ஒழிப்பு நாள் என்று ஒவ்வொரு வருடமும் அக்டோபர் 11ஆம் நாளில் மட்டும் எதிர்ப்பை இளைய சமுதாயம் தெரிவித்துவிட்டு நம் கடமை முடிந்தது என்று உள்ளனர், போதைகளின் விளைவை பெரும்பாலானோர் அறியவில்லை.

இந்த புகைப்பழக்கத்தால் இந்தியாவில் மட்டும் ஆண்டுக்கு 8 லட்சம் பேர் உயிரிழக்கின்றனர். இதனை உபயோகிக்கும் மனிதனின் வாழ்க்கையை இப்பழக்கம் ஒவ்வொரு முறையும் 15 நிமிடம் குறைத்து விடுகிறது. இதனை தொடச்சியாக பிடிக்கும் மனிதன் தன் வாழ்நாளில் 7 ஆண்டுகளை இயற்க்கையாக இறப்பதற்கு முன் இறந்து விடுகிறான். இப்புகைப்பழக்கம் 2020ஆம் ஆண்டில் மிகப்பெரிய ஆள்கொல்லி நோயாக மாறிவிடும் என விஞ்ஞானிகள் எச்சரித்து உள்ளார்கள். உலகம் முழுவதும் 35 லட்சம் பேர் இப்பழக்கத்திற்கு அடிமையாகி மரணிக்கின்றனர். இந்த நச்சுப்புகையை அருகிலிருந்து சுவாசிப்பவருக்கு ஒரு ஆண்டுக்கு 10 லட்சம் பேர் பிற நோயால் பாதிப்படைகின்றனர். வளர்ந்துவிட்ட நாடாகிய அமெரிக்காவில் ஒரு ஆண்டுக்கு 3 ஆயிரம் சிறுவர்கள் இப்பழக்கத்துக்கும் இந்தியாவில் 2 கோடி சிறுவர்கள் இப்பழக்கத்துக்கும் அடிமையாகின்றனர்.

மேலும் நிக்கோடின் போன்ற நச்சுப் பொருட்கள் மனிதனின் இரத்தத்தில் கலந்து உடலுறுப்புகள் பாதிப்படைகின்றன. விரைவிலேயே மலட்டுத் தன்மையை அடைகிறார்கள். இந்த சிகரெட் விற்பனையில் 3-வது இடத்தில் இந்தியா உள்ளது. 5 ஆயிரத்து 500 கோடி இதன் மூலம் சம்பாதிக்கிறது. ஆனால் புகைப்பதால் வரும் நோய்க்கு செலவிடும் தொகை 13 ஆயிரத்து 500 கோடியை மக்களிடமிருந்து வசூலிக்கிறது.

இவ்வாறு மனிதனின் உயிரை அவன் அறியாத விதத்தில் பறிக்கும் நஞ்சை அமிர்தமாக எண்ணி தன் ஆரோக்கியத்தைக் கெடுத்து தன் முதுமைப்பருவத்தை நோயினால் கழிக்கின்றனர். இதில் இஸ்லாமிய இளைஞர்களும் இருப்பதை எண்ணினால் வேதனை தான் மிஞ்சுகிறது.

அதிகம் அருந்தினால் போதை தரும் பானத்தைக் குறைவாக அருந்துவதும் ஹராம(தடுக்கப்பட்டத)ாகும் என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

***அறிவிப்பவர்: ஜாபிர்(ரலி)***
***ஆதாரம்: திர்மிதி, அபூதாவூத்***

அடுத்து மதுவைப் பற்றிப் பார்ப்போம்.

மனிதர்கள் மதுவின் பக்கம் செல்வதைக்கூட இஸ்லாம் அனுமதிக்கவில்லை. நபி(ஸல்) அவர்கள் அல்லாஹ்வையும், மறுமை நாளையும் ஆழமாக நம்பியவர்கள் மதுபானம் பரிமாறப்படுகின்ற இடத்தில் அமர வேண்டாம் என்று கூறியுள்ளார்கள்.

இன்று மேலை நாடுகளிலும், நம் நாடுகளில் கூட 5 நட்சத்திர ஹோட்டல்களிலும், சில அலுவலக விழாக்களிலும் Party என்ற பெயரில் இசைகளுடன் பரிமாறக்கூடிய குளிர்பானங்களில் மதுவை கலந்து தருகின்றனர். இதனை அறியாத சிலர் அதை பருகிவிடுகிறார்கள், சிலர் அறிந்தே பருகி அதில் பல வரம்புகளை மீறிவிடுகின்றனர். இதனை நபி(ஸல்) அவர்கள், எனது சமூகத்தில் வேறு பெயர்களை வைத்து மது அருந்துவார்கள், அவர்களது முன்னிலையில் இசைகருவிகள் இசைக்கப்படும், பாடல்கள் பாடப்படும், இவர்களை அல்லாஹ் பூமிக்குள் சொருகி விடுவான் என்றார்கள்.

***ஆதாரம்: இப்னு மாஜா***

நிச்சயமாக அல்லாஹ் மதுவைப் பிழிபவன், பிழியச் சொல்பவன், அருந்துபவன், ஊற்றிக் கொடுப்பவன், சுமப்பவன், சுமக்கச் சொல்பவன், விற்பவன், வாங்குபவன், அன்பளிப்புச் செய்பவன், அதன் வருமானத்தில் உண்பவன் என, மதுவுடன் தொடர்புடைய பத்து நபர்களை நபி(ஸல்) அவர்கள் சபித்தார்கள்.

*அறிவிப்பவர் : அனஸ்(ரலி)*
***ஆதாரம்: திர்மிதி, இப்னுமாஜா, அபூதாவூத்***

சில இஸ்லாமிய இளைஞர்கள்கூட இதுபோன்ற Function–னில் கலந்து தன் நிலையை மறக்கின்றனர்.

சமீபத்தில் வார இதழ் ஒன்றில் உண்மை சம்பவமாக இடம்பெற்ற பகுதியில், ஒரு ஆண் மது அருந்திவிட்டு இரவில் வீட்டிற்க்கு சென்று தன் மனைவி என்று போதையில் தன் மகளிடம் தகாத முறையில் நடந்து கொண்டான். இவ்வாறு போதையானது மனிதனை மிருகத்தைவிட கேவலமாக மாற்றிவிடுகின்றது.

நபி(ஸல்) அவர்கள் இதனையும் தெளிவுபடுத்தியுள்ளார்கள். மதுபானம் பெரும்பாவங்களில் ஒன்றானது. மானக்கேடான காரியங்களின் முதன்மையானது. மதுபானம் அருந்தியவன் தொழுகையை விட்டு விடுவான். தனது தாய், தாயின் சகோதரி, தந்தையின் சகோதரி போன்ற உறவுகளுடன் பாலியல் ரீதியான தொடர்பில் ஈடுபட்டு விடுவான் என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

***ஆதாரம்: தப்ராணி***

இறைவன் மதுவைப் பற்றி தன் திருமறையில்

**"ஈமான் கொண்டவரே! மதுபானமும், சூதாட்டமும் கற்சிலைகளை வழிபடுதலும், அம்புகள் எறிந்து குறி கேட்பதும் ஷைத்தானின் அருவருக்கத்தக்க செயல்களில் உள்ளவையாகும். ஆகவே நீங்கள் இவற்றை தவிர்த்துக் கொள்ளுங்கள். அதனால் நீங்கள் வெற்றி அடைவீர்கள்"**

**நிச்சயமாக ஷைத்தான் விரும்புவதெல்லாம் மதுபானத்தைக் கொண்டும், சூதாட்டத்தைக் கொண்டும் உங்களிடம் பகைமையையும், வெறுப்பையும் உண்டுபண்ணி அல்லாஹ்வின் நினைவிலிருந்தும், தொழுகையிலிருந்தும் உங்களை தடுத்துவிடத்தான்**

*(தொடர்ச்சி – 5 ஆம் பக்கம் பார்க்க..)*

# குர்ஆனில் கருவளர்ச்சி

*- M. அஹமது பாக்கவி. M.A*

**"மனிதனை நாம் களிமண் சத்திலிருந்து படைத்தோம் பின்னர் அவனை ஒரு பாதுகாப்பான இடத்தில் விந்தாக ஆக்கினோம்"**

எனக் கூறியதை நவீன அறிவியல் கண்டுபிடிப்புகள் நிரூபித்து நிற்கின்றன. விந்தினை உருவாக்குவதை கருவியலின் ஒரு படிநிலையாக திருமறை கூறியதைப் போன்றே நவீன கருவியல் கண்டுபிடிப்புகளும் விந்து உருவாக்கப்படுவதை கருவியலின் முதல் படிநிலையாக ஏற்றுக் கொண்டதை முந்திய தொடரில் கண்டோம்.

இதற்கடுத்த படிநிலையில் கருமுட்டை கருவுறுதலை ஒரு படிநிலையாக நவீன கருவியல் கூறுகிறது. இப் படிநிலையில் ஆணிலிருந்து வெளிப்படும் விந்தணுவும், (இதனை உயிரணு என்றும் கூறுவார்கள்) பெண் விந்திலிருந்து வெளிப்படும் கருமுட்டையும் ஒன்றை ஒன்று சந்தித்து இணைந்து கொள்கின்றன. இந்த இணைப்பின் வாயிலாக விந்தணு கருமுட்டைக்குள் நுழைந்து கருமுட்டையைக் கருவுறச் செய்வதால், அதன் பிறகு கருமுட்டைக்கு "கருவுற்ற கருமுட்டை" (Zygot) என அழைக்கப்படும்.

இவ்வாறு விந்தணு கரு முட்டைக்குள் நுழைந்து, அதனைக் கருவுறச் செய்வதை ஒரு படிநிலையாக நவீன கருவியல் கூறுகிறது. திருமறையின் வார்த்தைகளில் இந்த நிலை "அலக்" எனக் கூறப்படுகிறது. "அலக்" என்ற அரபிச் சொல்லுக்கு ஒட்டிப் பிடித்துத் தொங்கும் ஒரு பொருள் என ஒன்றுக்கு மேற்பட்ட பல பொருள்கள் இருப்பதாக அரபு மொழியின் வல்லுனர்கள் கூறுகிறார்கள். எனவே இச்சொல்லை எந்தப் பொருளில் இறைவன் பயன்படுத்தியுள்ளான் எனத் தீர்மானிக்கும்போது தவறு நேர்ந்துவிடக் கூடாது என்பதற்காக சில மொழி பெயர்ப்பாளர்கள் அச்சொல்லை மொழி பெயர்க்காமல் அப்படியே பயன்படுத்தியுள்ளார்கள். இருப்பினும், இச்சொல்லுக்கு "தொங்குபொருள்" எனப் பொருள் கொள்வதே பொருத்தமாக இருக்கும் என நாம் கருதுவதால் (இதைக் குறித்து கூடுதல் விபரங்களுக்கு டாக்டர் மாரிஸ் புகைல் அவர்கள் எழுதிய நூலின் தமிழ் மொழிபெயர்ப்பாகிய "விஞ்ஞான ஒளியில் குர்ஆனும், பைபிளும்" என்ற நூலைப் பார்க்கவும்) நமது கட்டுரையில் இவ்வாறே பொருள் கொள்வோம்.

எனவே ஆணிலிருந்தும், பெண்ணிலிருந்தும் வெளிப்படும் விந்து தொங்கு பொருளாக மாறும் நிகழ்ச்சி ஒன்று நடைபெறுவதாகவும், அதையே தன்னுடைய படிநிலையாகவும் திருமறை கூறுகிறது. திருமறை கூறும் இப் படிநிலையை மெய்ப்பிக்கும் பொருட்டு நவீன கருவியல் அழகாக விளக்கம் தருகிறது. நவீன கருவியலின் கண்டுபிடிப்புகளின் துணையோடு பார்க்கும்போது விந்தணு கரு முட்டைக்குள் நுழைந்து அதனை கருவுறச் செய்து பிறகு கருவுற்ற கருமுட்டை நேராக கருவறைக்குள் வந்து அதன் சுவர்களுக்குள் ஒட்டித் தொங்கியவாறே வளரத் துவங்குகிறது என்பதை நம்மால் பார்க்க முடிகிறது.

எனவே ஆண், பெண் விந்துக்கள் ஒன்றோடொன்று இணைந்து கருப்பையில் தங்குவதையே திருமறை தன்னுடைய படிநிலைகளில் ஒன்றாகக் கூறுகிறது என்பதையும், இப்படி ஒரு நிகழ்ச்சி கருவறையில் நடைபெறும் என்பதையும் நாம் ஐயமறத் தெரிந்து கொண்டோம்.

இதற்கு அடுத்த படிநிலையில் அந்தத் தொங்கு பொருள் ஒரு சதைத் திரட்சியாக மாற்றப்படுகிறது என்பதைத் திருமறைக் கூறும்போது நவீன கருவியல் கண்டுபிடிப்புகளும் கருவுற்ற கருமுட்டை தன் செல்களைப் பிளந்து பெருகச் செய்து (Cleavage - பிளவிப்பெருக்க முறைப்படி) ஒரு சதைக் கோளமாக மாறுகிறது எனக் கூறி திருமறை கூறும் படிநிலையைத் தன்னுடைய படிநிலையாக ஏற்றுக் கொள்கிறது. இதற்கடுத்த படிநிலையில் அந்தத் சதைக்கோளம் மூன்று வகை அடுக்குகளாக வடிவம் பெறுகிறது. குழந்தையின் உடற்கூறுகள் யாவும் இந்த மூன்று அடுக்குகளிலிருந்தே உற்பத்தியாகின்றன.

முதலாவது அடுக்காகிய எண்டோ டெர்ம் (Entoderm) என்பதிலிருந்து குழந்தையின் நரம்புகளும், சருமமும் உருவாகிறது.

இரண்டாவது அடுக்காகிய மீசோ டெர்ம் (Mesoderm) என்பதிலிருந்து எலும்பு, சதை மற்றும் இரத்த நாளங்கள் உற்பத்தியாகின்றன.

மூன்றாவது அடுக்காகிய எக்டோ டெர்ம் (Ectoderm) என்பதிலிருந்து குடல்களும், சுரப்பிகளும் உருவாகின்றன.

இவ்வாறு படிநிலைகளில் குழந்தையின் உடற்கூறுகளை உருவாக்கும் பொருட்டு அச்சதைக்கோளம் ஒரு வகையில் மூன்று அடுக்குகளாக வடிவம் பெற்றும் மற்றொரு வகையில் உடற்கூறுகளில் எதுவும் வடிவம் பெறாமலும் இருக்கும் நிலையே காணப்படுகிறது. இப் படிநிலையில் கருவின் நிலை எவ்வாறு இருக்கும் என்பதை நாம் சுருங்கக் கூறினால் ஒருவகையில் வடிவம் பெற்றதும், மற்றொரு வகையில் வடிவம் பெறாததுமான கரு எனக் கூறலாம். இப் படிநிலையை நவீன கருவியல் விஞ்ஞானம் மூவடுக்குயிரி (Gastrula) என அழைக்கிறது. இப்படிநிலையின்போது, கருவறைகளில் மனிதன் எவ்வாறு உருவாக்கப்படுகிறான் என்பதை நுண்ணோக்கியின் துணை கொண்டு நவீன விஞ்ஞானிகள் எதைக் கண்டுபிடித்தார்களோ அதை இம்மியும் பிறழாமல் திருமறைக் குர்ஆன் தன்னுடைய கருவியல் சார்ந்த மற்றொரு வசனத்தில் எவ்வளவு அற்புதமாகக் கூறி நிற்கிறது!

திருமறை கூறுகிறது:

**"(அலக் எனும் படிவநிலைக்குப் பிறகு) வடிவமைக்கப்பட்டதும், வடிவமைக்கப்படாததுமாகிய சதைத் திரட்சியிலிருந்தும், (உங்கைளைப் படைத்தோம். நீங்கள் நம்மால் எவ்வாறு படைக்கப்பட்டீர்கள் எனும்) உண்மை நிலையை நாம் உங்களுக்கு விளக்குவதற்காகவே (இதை எடுத்துரைக்கிறோம்)"**

***(அல்-குர்ஆன் 22: 5)***

மேற்கண்ட வசனத்தின் வாயிலாக மூவடுக்குயிரி எனும் படிநிலையில் கரு எந்த நிலையில் இருக்கும் என்பதை நவீன கருவியல் கண்டுபிடிப்பு என்ன கூறுகிறதோ அதை எவ்வளவு இரத்தினச் சுருக்கமாகவும், கருவியலை அறிந்து கொண்ட எந்த நபராலும் சட்டெனப் புரிந்து கொள்ளும் விதத்திலும், "வடிவமைக்கப்பட்டதும், வடிவமைக்கப்படாததுமான" என இரண்டே, இரண்டு வார்த்தைகளில் திருமறை எடுத்துரைத்து நம்மை வியப்பில் ஆழ்த்துகிறது என்பதை பார்த்தீர்களா?.

மனிதனின் உடற்கூறுகள் அனைத்தையும் செல்களே உற்பத்தி செய்கின்றன என்பதை நாமறிவோம். எனவே நமது தோல், சதை, எலும்பு, குடல், நரம்பு போன்ற எதுவாயினும் அவைகளையும் செல்களே உற்பத்தி செய்தாக வேண்டும். எனவே கோடிக்கணக்கான செல்களால் உற்பத்தியாக வேண்டிய நமது உடற்கூறுகள்

ஒவ்வொன்றையும் உற்பத்தி செய்யும் பொருட்டு, அது அதற்கேற்ற சிறப்பியல்புகளைக் கொண்ட சில மூலச் செல்கள் நமது கருவில் முதலாவதாகத் தோன்ற வேண்டும். எனவே கருவுற்ற கரு முட்டை சதைத் திரட்சியாக மாறும்போது இந்த மூலச் செல்கள் தோன்றி விடுகின்றன.

ஆயினும் இந்த மூலச் செல்களில் எந்தெந்த செல்கள் எந்தெந்த இடத்தில் அமைய வேண்டுமோ அந்தந்த இடத்தில் அவை அமையப் பெற்றிராது. நாம் ஒரு வாதத்திற்காக சதைத் திரட்சியாக இருக்கும் கரு மூவடுக்கு உயிரியாகாமல் அப்படியே வளர்வதாக வைத்துக் கொள்வோம். அப்படியே அக்கரு வளருமானால் நாம் இதுவரை பார்த்திராத ஓர் அகோர உருவமாகவே இது இருக்கும். அதன் கண்கள் முகத்தில்தான் இருக்க வேண்டுமென்பதில்லையே. அவை குடலுக்கள் கூடத் தோன்றலாம். அதன் இதயம் மார்புக்கு வெளியில் தோன்றலாம். "தொடையிடுக்கில் தலை இருக்கலாம். ஆகவே இப்படிப்பட்ட ஓர் பிறவி இருக்குமானால் அது வடிவமைப்பு இல்லாத பிறவியேயன்றி வேறில்லை. ஆயினும் சதைத் திரட்சி மூவடுக்குயிரியாக மாறும்போது, இந்த விபத்து தவிர்க்கப்படுகிறது.

உடலின் எத்தகைய செல்கள் எந்தெந்த உறுப்புகளைத் தோற்றுவிக்க வேண்டுமோ அந்தந்த உறுப்புக்கள் இருக்க வேண்டிய இடத்தை நோக்கி அத்தகைய செல்கள் நகர்ந்து சென்று உரிய இடத்தில் அமர்வதால் அதற்கேற்ற வகையில் சதைத் திரட்சியும் மூன்று வகை மூலாதார அடுக்குகளாக (Germlayers) வடிவம் பெறுகிறது. இதன் காரணமாகவே மூவடுக்குயிரி வளரத் துவங்கியதும், அதிலிருந்து உருவாகும் உயிரினங்கள் அவைகளுக்குரிய உருவ அமைப்பைப் பெறுகின்றன.

எனவே, உயிரினங்களின் குறிப்பிட்ட உருவ அமைப்பை அவை பெறும்பொருட்டே சதைத் திரட்சியை மூன்று மூலாதார அடுக்குகளாக மூலச் செல்கள் நகர்ந்து சென்று வடிவமைப்புச் செய்கிறது என்று கூறுகிறது நவீன கருவியல். நவீன கருவியல் கூறும் இந்த அறிவியல் கண்டுபிடிப்பை திருக்குர்ஆன் "வடிவமைக்கப்பட்ட சதைத் திரட்சியிலிருந்து" எனும் வார்த்தைகளால் எவ்வளவு ஆழமாகவும், அற்புதமாகவும் எடுத்துரைக்கிறது.

மூன்றடுக்கு என்னும் இப் படிநிலையில் உயிரினங்களின் உருவத்தை அமைக்கக்கூடிய மூலச் செல்கள் யாவும் அதில் வடிவம் பெற்ற போதிலும் அவைகளின் உறுப்புக்கள் தோன்றாத காரணத்தால் இந்தப் படிநிலையில் உயிரினங்களின் உருவத் தோற்றம் பெற்றிராது எனக் கூறும் நவீன கருவியல் கண்டுபிடிப்புகளையும் திருமறைக் குர்ஆன் "வடிவம் பெறாததுமான சதைத் திரட்சியிலிருந்தும்." எனக் கூறிய வசனத்தால் எவ்வளவு அற்புதமாக எடுத்தியம்பி கருவியல் உலகை வியப்பில் ஆழ்த்தி நிற்கிறது!

நாம் எவ்வாறு படைக்கப்பட்டோம் என்பதன் உண்மை நிலையை நமக்கு அறிவிப்பதற்காகவே இக்கருவியல் விஞ்ஞானத்தை இறைவன் கூறுவதாகவும் அவ்வசனங்கள் கூறுகின்றன.

என்னே அற்புதம்!. நாம் முன் தொடர்களில் கூறியது போன்று நாம் எவ்வாறு உருவாகி வந்தோம் என்பதை கருவறைகளில் பத்து மாதம் தங்கியிருந்து உருவாகி வந்த நமக்கும் தெரியவில்லை. அல்லது குழந்தைகளின் படைப்பாளர்கள் அவர்களது பெற்றோர்களே எனக் கூறிய அந்த பெற்றோர்களுக்கும் தாங்கள் எவ்வாறு தங்களது குழந்தைகளைப் படைத்தார்கள் என்பது தெரியவில்லை.

இந்த அளவிற்கு இமாலயப் புதிராக விளங்கிய ஒரு நிகழ்ச்சியையன்றோ திருமறைக் குர்ஆன் வெட்ட வெளிச்சமாகப் பிட்டு பிட்டு வைக்கிறது. படைப்பு நிகழ்ச்சி மெய்யாகவே திருமறையின் இரட்சகனால் நிகழ்த்தப்பெறவில்லையெனில் இம்மாபெரும் புதிரை அவனால் எப்படி அவ்வளவு எளிதாக கூறியிருக்க இயலும்?. அறிவியல் உலகில் வாழும் நாம் சிந்தித்துப்பார்க்க வேண்டாமா?

நமது சிந்தனைக்கு விருந்தாகும் பொருட்டு சிந்திப்பதற்குரிய மற்றொரு கோணத்தையும் நாம் கவனத்தில் கொள்வோம்.

குருடன் பார்க்கிறான், முடவன் நடக்கிறான், ஆகவே இவர்தான் கடவுள் எனச் சிலரும், அவர் ஆகாயத்தில் பறந்தார். அவர்தான் கடவுள், இவர் கடலைக் கடந்தார் ஆகவே இவரும் கடவுள், அவர் முற்றும் துறந்தார் ஆகவே அவரும் கடவுள் எனப் பற்பல கடவுளர்கள் அறிமுகப்படுத்தப்படுகிறார்கள் என்பதை நாம் அனுதினமும் கண்டு வருகிறோம்.

ஆனால் நானே இறைவன்! நான் உங்களது படைப்பாளன்! எனக்கூறி விஞ்ஞான யுகம் வரை யாராலும் கண்டுபிடிக்க இயலாமலிருந்த படைப்பு நிகழ்ச்சியையே, அப்படைப்பு நிகழ்ச்சியில் காணப்படும் பிழையற்ற மெய்யான செயற்பாடுகளையே (Process) ஆதாரம் காட்டி, வாதிட்டு அறிவியல் உலகையே வியப்பில் ஆழ்த்தும் ஒருவன் திருக்குர்ஆனின் இரட்சகனைத் தவிர வேறு யார்?

தாமே இறைவன் என்பதற்கு அவன் தனது மறையில் வழங்கிக் கொண்டிருக்கும் எண்ணிறைந்த அறிவியல் ஆதாரங்களைக் காட்டிலும் வலுவான வாதப் பொருட்கள் வேறு ஏதும் இருப்பதாக நீங்கள் கருதுகிறீர்களா?

அறிவியலைக் காட்டிலும் சிறந்த ஆதாரம் வேறு எதுவும் இல்லை என்பதே உங்கள் கூற்றாக இருந்தும் அந்த அறிவியல் ஆதாரங்களைக் கொண்டே நிரூபிக்கப்படும் திருக்குர்ஆனின் இறையாண்மையை மறுத்துரைப்பது நீங்கள் பெற்றிருப்பதாகக் கூறப்படும் பகுத்தறிவிற்கேற்ற செயலாகுமா? நீங்கள் சிந்திக்க வேண்டாமா?

வடிவமைக்கப்பட்டதும், வடிவமைக்கப்படாததுமாகிய சதைத் திரட்சியிலிருந்தே மனிதன் படைக்கப்பட்டான் என ஒருவர் கூற வேண்டுமாயின் கருவியலில் எந்த அளவிற்கு ஆழமான ஞானத்தை அவர் பெற்றிருக்க வேண்டும் என்பதை அதைப்பற்றிய அறிவுடைய எந்த நபரால்தான் புறக்கணிக்க இயலும்?.

செல்கள் என்பவை நுண்ணோக்கியால் மட்டுமே புலப்படும். அதிலும் உடலுறுப்புகளைத் தோற்றுவிக்கும் பொருட்டு மூலச் செல்கள் கருவில் தோன்றுகின்றன என்பது நவீன வசதிகளைக் கொண்ட பற்பல ஆய்வுக் கூடச் சோதனைகளால் மட்டுமே கண்டுபிடிக்க இயலும். மேலும் அந்த மூலச் செல்கள் ஒரு கட்டத்தில் நகரத் துவங்கி மூவடுக்குயிரியில் சரியான விதத்தில் வடிவமைகின்றன என்பதும் பொறுமையுடன் பல நூறு கருத்துக்களை பல வருடங்கள் ஆய்வு செய்வதால் நிலை நாட்டப்படும் உண்மையாகும்.

ஆயினும் இப்படிப்பட்ட அறிவியல் வளர்ச்சியோ, ஆய்வக வசதியோ, அறிவியல் கருவிகளோ அல்லது இத்தகு அறிவியல் உண்மைகளை விளங்கிக் கொள்ளும் அளவிற்கு அறிவியல் திறம் படைத்த அறிவியலாளர்களோ இல்லாத ஏழாம் நூற்றாண்டில் வந்த குர்ஆனால் இந்த உண்மைகளை எவ்வாறு தெரிந்து கொள்ள இயன்றது என்பதை மட்டுமாவது ஒரு கணம் சிந்தியுங்களேன்! உங்கள் அறிவுப் பசிக்கு விருந்தளித்துக் கொண்டிருக்கும் பல்வேறு அறிவியல் வசனங்களை தொடர்ந்து நாம் ஆராய்ந்து பார்த்தால் உலகே வியக்கும் குர்ஆனின் பேருண்மைகள் நமக்குப் புலப்படும்.

☆ ☆ ☆

*(2 ஆம் பக்கத் தொடர்ச்சி – கல்லூரியில் ..)*

**எனவே அவற்றை விட்டும் நீங்கள் விலகிக் கொள்ள மாட்டீர்களா?**

***அல்-குர் ஆன் 5: 90, 91***

இப்பழக்கத்திற்கு அடிமையாவதன் மூலம் தன் படிப்பில் கவனம் இல்லாமல் தன் மனம் போன போக்கில் சென்று தன் எதிர்காலத்தை இருளாக ஆக்கிகொள்கின்றனர். மற்ற மனிதர்களிடமும் இழிவான அந்தஸ்தை பெற்றுக் கொள்கின்றனர்.

நபி(ஸல்) அவர்களின் காலத்தில் மது அருந்தியவனை அடியுங்கள் என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். அப்பொழுது எங்களில் சிலர் செருப்பாலும், ஆடைகளினாலும், கரத்தாலும் அவனை அடித்தனர்.

***ஆதாரம்: புகாரி***

சமீபத்தில் மதுரையைச் சார்ந்த ஒரு கல்லூரி மாணவிகூட கஞ்சா விற்று காவல் துறையினரிடம் குற்றவாளியாகப் பிடிபட்டுள்ளாள். (தினமணி: 21-02-2006)

போதைக்கு ஆண்கள்தான் அடிமையாகி உள்ளார்கள் என்ற நிலை மாறி பெண்களும் இதில் ஈடுபட்டுள்ளதுதான் மிகப் பெரிய வேதனையளிக்கும் விஷயமாகும்.

மறுமையில் இதற்கான தண்டனைகளையும் இஸ்லாம் தெளிவாக கூறுகிறது.

மது அருந்துபவனின் நாற்பது நாட்கள் தொழுகை ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. அதற்காக அவன் மன்னிப்புத் தேடினால் அல்லாஹ் அவனை மன்னித்து விடுகிறான். அதை மீண்டும் அருந்தினால் மேலும் நாற்பது நாட்கள் தொழுகையை அல்லாஹ் ஏற்றுக்கொள்ள மாட்டான். அதற்காக அவன் மன்னிப்புத் தேடினால் அல்லாஹ் அவனை மீண்டும் மன்னித்து விடுகிறான். அதை மீண்டும் அருந்தினால் மேலும் நாற்பது நாட்கள் தொழுகையை அல்லாஹ் ஏற்றுக்கொள்ளமாட்டான். அதற்காக அவன் மன்னிப்புத் தேடினால் அல்லாஹ் அவனை மீண்டும் மன்னித்துவிடுகின்றான். நான்காம் தடவையும் மது அருந்தினால் அவனது நாற்பது நாட்கள் தொழுகையை அல்லாஹ் ஏற்றுக் கொள்ளாதது மட்டுமின்றி அவன் அதற்காக மன்னிப்புத்தேடினாலும் அவனை அல்லாஹ் மன்னிக்க மாட்டான். மேலும் அவனுக்கு ஹபால் எனும் நதியிலிருந்து புகட்டுவான் என நபி(ஸல்) கூறியதாக இப்னு உமர்(ரலி) அறிவித்தார்கள். அப்போது அபூஅப்துர்ரஹ்மானே! ஹபால் என்றால் என்ன? என்று கேட்கப்பட்டபோது அது நரகவாசிகளின் சீழ், சல நதி என்றார்கள்.

***அறிவிப்பவர் : இப்னு உமர்(ரலி)***

***ஆதாரம்: திர்மிதி, ஹாகிம்.***

இறைவன் தடுத்ததைப் பயன்படுத்துவதால் மறுமையில் அவனிடம் குற்றவாளியாக நிற்கின்றான்.

தொடரும்

***(இன்ஷா அல்லாஹ்)***

☆ ☆ ☆

*(முதல் பக்கத் தொடர்ச்சி –லேபர் லா..)*

புதிதாக பணியில் சேர்ந்தவர்களின் பயிற்சி காலமானது, எல்லா வேலை நாட்களும் கணக்கிடப்படும். இதில் பண்டிகை விடுமுறைகள், நோய் விடுப்பு மற்றும் வாரவிடுப்புகளும் கணக்கிடப்பட்டு பயிற்சி காலத்தில் சேர்ப்பிக்கப்படும்.

உடல் ஊனமுற்றோர் பணியாளர்களை வேலைக்கு அமர்த்தும் சதவிகிதம் 2 முதல் 4 ஆக உயர்த்தப்படுகிறது.

புதிய லேபர் லா-வின் படி பணியாளர்களின் ஓய்வு பெறும் வயது ஆண்களுக்கு 60 ஆகவும், பெண்களுக்கு 55 ஆகவும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

பணியானர்களின் வருட விடுப்பு நாட்கள் 21 லிருந்து 30 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இச்சலுகை 5 வருடம் ஒருவர் ஒரே நிறுவனத்தில் தொடர்ந்து பணியாற்றியிருந்தால் மட்டுமே ஆகும்.

ஒரு நிறுவனத்தில் 2 வருடம் ஒருவர் பணியாற்றியிருந்தாரேயானால் அவர் ஹஜ் என்ற புனித யாத்திரை செல்ல 10 முதல் 15 நாட்கள் சம்பளத்துடன் கூடிய விடுப்பு எடுப்பதற்குத் தகுதிபெற்றவராவார்.

நிறுவனத்தில் பணிபுரிந்து கொண்டே படிப்பவர்களுக்கு, அவர்களின் தேர்வு காலங்களில் சம்பளத்துடன் கூடிய விடுப்பு நிறுவனம் அளிக்க வேண்டும்.

மேலும் பணியாளர்கள் ஒரு வருடத்தில் 20 நாட்கள் சம்பளம் இல்லாமல் நிறுவனத்தின் ஒப்புதலுடன் விடுமுறை எடுத்துக் கொள்ளலாம்.

பணியாளர்கள் நோய்வாய்ப்பட்டால் தக்க மருத்துவச் சான்றிதழுடன் 30 நாட்கள் சம்பளத்துடன் கூடிய நோய் விடுப்பு (Medical Leave) எடுத்துக்கொள்ளலாம். 60 நாட்கள் நோய் விடுப்பு எடுக்க நேரிட்டால் மூன்றில் ஒரு பகுதி சம்பளம் கொடுக்கப்படும். 60 நாட்கள் நோய்விடுப்பில் 30 நாட்களுக்கு சம்பளம் இல்லாமலும் இருக்கலாம்.

இப்புதிய லேபர்லா- பெண்களுக்கு அதிக சலுகைகளை அளிப்பதாக உள்ளன, அவையாவன. ஒரு நிறுவனத்தில் பெண்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டால் அவர்களுக்குண்டான ஈட்டுத்தொகை நிறுவனம் அளிக்க வேண்டும். மேலும் அவர்களின் திருமணத்தின் போதும், மகப் பேறுகாலத்தின் போதும் சிறப்புச் சலுகைகள் அளிக்கப்படும்.

50 க்கும் மேற்பட்ட பெண்கள் பணிபுரியும் நிறுவனத்தில் அவர்கள் குழந்தைகளைப் பராமரிக்க குழந்தைக் காப்பகங்கள் அந்த நிறுவனம் அமைத்துத்தர வேண்டும். 100 அல்லது அதற்கு மேற்பட்ட பெண்கள் பணிபுரியும் நிறுவனங்களில் தொழிலாளர் அமைச்சகம் (Ministry Of Labour) தலையிட்டு குழந்தைகள் காப்பகம் அமைத்துத்தரும்.

லேபர் லா- 14வது பிரிவின் படி

கிழக்குப் பிராந்திய தொழிலாளர் அலுவலக இயக்குனர் முஹம்மது அல் ஹம்தான் கூறுகையில் தொழிலாளர் சங்க அலுவகங்களுக்கு (Labour Offiice) அதிக அதிகாரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன, எனத் தெரிவித்தார். லேபர் அலுவலகங்களில் பெண்களையும் வேலைக்கு நியமனம் செய்யலாம் என்ற புதிய விதியையும் தெரிவித்தார்.

கவுன்சிலர் யாஸிர் இமாம் அல்-கந்தூர் கூறுகையில் இப்புதிய லேபர் சட்ட திருத்தங்கள் முதலில் இருந்த பிரிவு – 16ன் கீழ் அமைந்த 245 ஷரத்துக்கள் அனைத்தையும் இது நிறைவு செய்யும் எனக் குறிப்பிட்டார். மேலும் இந்தப் புதிய லேபர் சட்டத்திருத்தங்கள் பணிபுரிபவருக்கும், பணியில் அமர்த்துபவருக்கும் இடையே பரஸ்பர நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் என்றும் குறிப்பிட்டார்.

# ஆதாமின் மகனே! (தொடர்-2)

–ஸாலிஹ் குலசை

(சென்ற மாத இதழை படித்துவிட்டு தொடரவும்)

அந்த மூ:ஃமின் அம்மனிதரை நோக்கி நீ யார்? என்று கேட்பார், அப்பொழுது அம்மனிதர் நான் தான் (நீ உலகில் தேடி வைத்த) உனது சாலிஹான அமல்கள் (அல்லாஹ் தான் இந்த உருவில் உன்னிடம் என்னை அனுப்பியுள்ளான்) என்று கூறுவார் அப்பொழுது அந்த மூ:ஃமின்

அல்லாஹ்வே! எனது குடும்பத்துடனும் நான் தேடி வைத்திருந்த எனது அமல்களுடனும் சென்றடைய மறுமையை உண்டாக்குவாயாக!. என்று கேட்பார். மரண வேளையிலிருந்து கப்ர் வரை ஒரு மூ:ஃமினுடைய நிலை இவ்வாறிருக்கும்.

அவன் இறை நிராகரிப்பவனாக பூமியில் வாழ்ந்திருந்தால்

நிராகரிக்கக் கூடியவன் மரண வேளையை நெருங்கி விட்டால் கருநிற (விகாரமான) முகத்துடன் சில மலக்குகள் வந்து அவனது கண் பார்வை எட்டும் தூரத்தில் அமர்ந்து விடுவார்கள். அவர்களிடத்தில் ஒரு கம்பளி துணியிருக்கும் அப்போது உயிரை கைப்பற்றக்கூடிய மலக்கு வந்து அவனருகில் அமர்ந்து ஏ! கெட்ட ஆத்மாவே! அல்லாஹ்வின் புறத்திலிருந்து இழிவின்பாலும் அவனுடைய கோபத்தின்பாலும் நீ வெளியேறி வா!! என்று கூறுவார்.

அப்போது அவ்வுயிர் ஒளிந்து கொள்வதற்காக உடல் முழுவதும் ஓட ஆரம்பித்துவிடும். ஆனால் உயிரை கைப்பற்றக்கூடிய மலக்கு அவனுடைய உடலிலிருந்து உயிரை பலவந்தமாக பிடுங்கி விடுவார்கள், நனைந்த கம்பளியிலிருந்து ஒரு முடியை பிடுங்குவது எவ்வளவு கடினமோ, அதைவிட கடினமாக அந்த உயிரை பிடுங்கி எடுப்பார்கள்.

பின்னர் அவ்வுயிர் அந்த கம்பளியால் சுருட்டப்பட்டு முதலாவது வானத்திற்கு கொண்டு செல்லப்படும், அது ஒரு பிணத்தின் வாடையை விட துர்நாற்ற வாடையாய் இருக்கும். முதலாவது வானத்தில் உள்ள மலக்குகள் இது என்ன? துர்வாடை என கேட்பார்கள். அப்பொழுது அந்த மலக்குகள் உலகில் அவனுக்குக் கூறப்பட்ட பெயர்களில் மிகக்கெட்ட பெயரைக் கூறி இன்னாருடைய மகன் இன்னார், என்று கூறுவார்கள்.

அதனை தொடர்ந்து வானத்தை திறந்து விடுமாறு ரூஹை சுமந்து வந்த மலக்குகள் கூறுவார்கள், அவனுக்காக வானம் திறக்கப்பட மாட்டாது. நபியவர்கள் இவ்வாறு கூறிவிட்டு தொடர்ந்து பின்வரும் குர்ஆன் வசனத்தை ஓதினார்கள்.

**எவர்கள் நம் வசனங்களை பொய்ப்பித்து இன்னும் (அவற்றைப் புறக்கணித்து) பெருமையடித்தார்களோ நிச்சயமாக அவர்களுக்கு வானத்தின் (அருள்) வாயில்கள் திறக்கப்பட மாட்டா - மேலும் ஊசியின் காதில் ஒட்டகம் நுழையும் வரையில் அவர்கள் சுவனபதியில் நுழைய மாட்டார்கள் - இவ்வாறே குற்றம் செய்பவர்களுக்கு கூலி கொடுப்போம்.**

***(அல்-குர்ஆன் 7: 40)***

பின்னர் அல்லாஹ் அவ்வுயிரைச் சுமந்து வந்த மலக்குகளை நோக்கி அவனுடைய செயல்களை பூமியின் அடிப்பாகத்திலுள்ள ஸிஜ்ஜீன் என்ற இடத்தில் பதிவு செய்யுமாறு உத்தரவிடுவான். பின்னர் அந்த உயிர் முதலாவது வானத்திலிருந்து ஸிஜ்ஜீன் என்ற இடதத்திற்கு எறியப்படும் என்று நபியவர்கள் கூறிவிட்டு மீண்டும் தொடர்ந்து பின்வரும் குர்ஆன் வசனத்தை ஓதினார்கள்.

**அல்லாஹ்வுக்கு எதையும் இணைவைக்காது அவனுக்கு முற்றிலும் வழிபட்டவர்களாக இருங்கள் இன்னும் எவன் அல்லாஹ்வுக்கு இணை வைக்கிறானோ, அவன் வானத்திலிருந்து விழுந்து பறவைகள் அவனை வாரி எடுத்துச் சென்றது போலும் அல்லது பெருங் காற்றடித்து, அவனை வெகு தொலைவிலுள்ள ஓரிடத்திற்கு அடித்துக் கொண்டு சென்றது போலும் ஆகிவிடுவான்.**

***(அல்-குர்ஆன் 22: 31)***

ஸிஜ்ஜீனிலே அவனுடைய செயல்கள் பதியப்பட்ட பின்னர் அவனது உயிர் அவனுடைய உடலில் ஊதப்படும். பின்னர் அவனிடம் இரண்டு மலக்குகள் வந்து அவனை எழுந்திருக்கச் செய்து அமர வைப்பார்கள். அவர்கள் அவனை நோக்கி பின்வருமாறு கேள்விகள் கேட்பார்கள்.

கே: உனது இறைவன் யார்?

ப: ஆ..ஆ.. எனக்கு தெரியாது

கே: உனது மார்க்கம் என்ன?

ப: ஆ..ஆ.. எனக்கு தெரியாது

கே: உன்னிடத்தில் (மார்க்கத்தை போதிக்க) அனுப்பப்பட்டவர் யார்?

ப: ஆ..ஆ.. எனக்கு தெரியாது

கே: நீ அதனை எவ்வாறு அறிந்து கொண்டாய்?

ப: ஆ..ஆ.. எனக்கு தெரியாது

மேற்சொன்னவாறு அனைத்து கேள்விகளுக்கும் தனக்கு தெரியாது என்றே பதில் சொல்லுவான் இவன் பொய் சொல்லுகின்றான் நரகத்தின் விரிப்புகளை இவனுக்காக (கப்ரில்) விரித்து விடுங்கள், நரகத்தின் பக்கமிருந்து இவனுக்காக ஒரு கதவை திறந்து விடுங்கள் என்று கூறக்கூடிய ஓசையொன்று அப்பொழுது வானத்திலிருந்து வரும்.

நரகத்திலிருந்து உஷ்ணமும், விஷக்காற்றும் அவனுடைய கப்ர்க்குள் வீசும் அதனால், காற்று வீசும் பொழுதெல்லாம் அவன் மயக்கமுற்று விழுவான். அவனுடைய வலது இடது விலா எலும்புகள் ஒன்றுடன் ஒன்று பின்னிவிடுமளவு கப்ர் அவனை நெருக்கும். அழுக்கான ஆடையும் அவலட்சண முகமும் கொண்ட துர்வாடை வீசக்கூடிய ஒரு மனிதன் அவனிடம் வருவான். அம்மனிதன் அவனை நோக்கி “உனக்கு வாக்களிக்கப்பட்ட கேடு உண்டாக்கக்கூடிய இந்நாளை நான் உனக்கு நினைவு கூறி நன்மாராயம் கூறுகின்றேன்” என்பான், அப்பொழுது அவன் அவலட்சனமான இந்நிலையிலிருக்கும் நீ யார்? என கேட்பான். நான் தான் உனது தீய செயல்கள். என்று அவன் பதிலளிப்பான். அதனை தொடர்ந்து இறைவனே! நீ மறுமையை உண்டாக்காதே! என்று புலம்ப ஆரம்பித்து விடுவான்.

***அறிவிப்பவர்: பராஉ இப்னு ஆஸிப்(ரலி) அவர்கள்.***

***நூல்கள்: அஹ்மத், அபூதாவுத், ஹாகிம்.***

இது மறுமையை நம்பியவர்களுக்காகும். இதை நம்பியவர்களைத்தான் முஸ்லிம்கள் என்று பூமியில் அழைக்கப்படுகின்றனர்.

அல்லாஹ் தன் திருமறையில் கூறுகின்றான்:

**இந்த அநியாயக்காரர்கள் மரண வேதனையில் இருக்கும் போது நீங்கள் அவர்களைப் பார்த்தால், மலக்குகள் தம் கைகளை நீட்டி (இவர்களிடம்) "உங்களுடைய உயிர்களை வெளியேற்றுங்கள் இன்றைய தினம் நீங்கள் இழிவுதரும் வேதனையைக் கூலியாகக் கொடுக்கப்படுவீர்கள். ஏனெனில், நீங்கள் உண்மையல்லாததை அல்லாஹ்வின் மீது கூறிக் கொண்டிருந்தீர்கள் இன்னும், அவனுடைய வசனங்களை (நம்பாது நிராகரித்துப்) பெருமையடித்துக் கொண்டிருந்தீர்கள்" (என்று கூறுவதை நீர் காண்பீர்).**

***(அல்-குர்ஆன் 6: 93)***

## இறுதி உபதேசம் (இஸ்லாம், முஸ்லிம்)

தெளிவான அறிவு மண்ணறை வேதனையை மறுக்காது, காரணம் இதுபோன்ற நிலையை மனிதன் தன் வாழ்வில் பார்க்கத்தான் செய்கிறான். உதாரணமாக தூங்கக் கூடிய ஒருவன் கனவில் கடினமாக வேதனை செய்யப்படுவதாக உணர்ந்து சப்தமிடுகிறான், உதவியும் தேடுகிறான். ஆனால் அவனுக்கருகிலிருப்பவன் இதை உணர்வதில்லை. உயிரோடு உறங்கக்கூடியவனுடைய வேதனையையே அருகிலிருப்பவன் உணர முடியவில்லை என்றால் மரணித்தவனின் மண்ணறை வேதனையை உயிருள்ளவன் எப்படி நேரடியாக உணரமுடியும். மண்ணறை வேதனை என்பது உடலுக்கும், உயிருக்கும் சேர்ந்ததேயாகும். எனவே இஸ்லாத்தை ஏற்றுக் கொள்வதன் மூலம் நரக வேதனையிலிருந்து தங்களை தாங்களே காப்பாற்றிக் கொள்ளுங்கள்.

அல்லாஹ் தன் திருமறையில் கூறுகின்றான்

**..இன்றைய தினம் கா∴பிர்கள் உங்களுடைய மார்க்கத்தை (அழித்து விடலாம் என்பதை)ப் பற்றிய நம்பிக்கையை இழந்து விட்டார்கள். எனவே நீங்கள் அவர்களுக்கு அஞ்சாதீர்கள் எனக்கே அஞ்சி நடப்பீர்களாக. இன்றைய தினம் உங்களுக்காக உங்கள் மார்க்கத்தை பரிபூர்ணமாக்கி விட்டேன். மேலும் நான் உங்கள் மீது என் அருட்கொடையைப் பூர்த்தியாக்கி விட்டேன். இன்னும் உங்களுக்காக நான் இஸ்லாம் மார்க்கத்தையே (இசைவானதாகத்) தேர்ந்தெடுத்துள்ளேன்.**

***(அல்-குர்ஆன் 5: 3)***

**இதையே இப்ராஹீம் தம் குமாரார்களுக்கு வஸிய்யத்து (உபதேசம்) செய்தார் ய∴கூபும் (இவ்வாறே செய்தார்) அவர் கூறினார் "என் குமாரர்களே! அல்லாஹ் உங்களுக்குச் சன்மார்க்கத்தை (இஸ்லாமை) தேர்ந்தெடுத்துள்ளான். நீங்கள் முஸ்லிம்களாக அன்றி மரணிக்காதீர்கள்."**

***(அல்-குர்ஆன் 2: 132)***

இந்த உலகத்தில் எத்தனைதான் மார்க்கங்கள் மதங்கள் போதனைகள் இருந்தாலும் அவை எத்தனை வழிமுறைகளை சொன்னாலும் அல்லாஹ்வால் அங்கீகரிக்கப்பட்டதும் ஏற்றுக்கொள்ளப்பட்டதும் இஸ்லாம் மட்டுமே என்பதை நாம் மறந்துவிடாமல் ஆராய வேண்டும். முஸ்லிமானால் மட்டுமே ஷிர்க்கை தவிர நீங்கள் என்னதான் பாவங்கள் செய்தாலும் அதற்குரிய தண்டனைக்குப் பிறகாவது சொர்க்கம் செல்ல முடியும். கப்ர் வேதனையிலிருந்தும் தப்பமுடியும்.

அல்லாஹ் தன் திருமறையில் கூறுகின்றான்:

**நம்பிக்கை கொண்டோரே! நீங்கள் அல்லாஹ்வை அஞ்சவேண்டிய முறைப்படி அஞ்சுங்கள் மேலும், (அல்லாஹ்வுக்கு முற்றிலும் வழிப்பட்ட) முஸ்லிம்களாக அன்றி நீங்கள் மரிக்காதீர்கள்.**

***(அல்-குர்ஆன் 3: 102)***

**நீங்கள் முஸ்லிம்களாக அன்றி மரணிக்காதீர்கள்.**

***(அல்-குர்ஆன் 2: 132)***

**ஆகவே (மனிதர்களே!) உங்களுக்கு வேதனை வரும் முன்னரே நீங்கள், உங்கள் இறைவன் பால் திரும்பி, அவனுக்கே முற்றிலும் வழிபடுங்கள் (வேதனை வந்துவிட்டால்) பின்பு நீங்கள் உதவி செய்யப்பட மாட்டீர்கள்.**

***(அல்-குர்ஆன் 39: 54)***

எனதருமை சகோதரனே! உன்மீது எனக்கொரு கடமை உள்ளது அது நம் இறைவனின் சத்திய மார்க்கத்தை உன் முன் எந்த வழியிலாவது எத்தி வைக்க வேண்டும் என்பதாகும்

ஒரு நிமிடமேனும் சிந்திப்போம் செயல்படுத்துவதற்காக...!

தீர்மானிக்க வேண்டியதும் தேர்ந்தெடுக்க வேண்டியதும் நீ மட்டுமே.

அல்லாஹ் நம்மை அந்த வேதனையிலிருந்து காப்பாற்றுவானாக...!

புகழ் அனைத்தும் இறைவன் ஒருவனுக்கே..!

☆ ☆ ☆

## உங்களுக்குத் தெரியுமா?

1. "ASEAN" என்பதன் விரிவாக்கம் என்ன?
2. உலகிலேயே எந்த நாட்டில் தங்கம் அதிக அளவில் கையிருப்பில் உள்ளது?
3. உம்மு சுலைம்(ரலி) அவர்களை அல்லாஹ் திருமறையில் (வசனம் 59:9) எதற்காக பாராட்டுகின்றான்?
4. ஹிரோஷிமா தினம் அனுஷ்டிக்கப்படும் நாள் எது?
5. இஸ்லாத்தில் இணைந்து, கறுப்பு இன மக்களின் விடுதலைக்காகப் போராடி ஷஹீதானவரின் பெயர்?
6. The Saviours Of islamic Sprit, Islam and the world என்ற நூல்களை எழுதியவர் யார்?
7. எதை இறைவன் மன்னிக்கமாட்டான் என்று திருக்குர்ஆன் எடுத்தியம்புகிறது?
8. சுதந்திர இந்தியாவின் முதல் கல்வி அமைச்சர் யார்?
9. நவீன சீனாவை உருவாக்கியவர் யார்?
10. ஜப்பானின் இன்னொரு பெயர்?

***(விடைகள் : 9-ம் பக்கம்)***

# ஜனாஸாவின் சட்டங்கள்

*மௌலவி. இப்ராஹீம் மதனீ.M.A*

சென்ற இதழில் நோய் விசாரிப்பது பற்றித் தெரிந்து கொண்டோம். இந்த இதழில் ஜனாஸாவின் சட்டங்கள் பற்றி தெரிந்து கொள்வோம்.

**மரணம் நெருங்கிவிட்டது என எண்ணுபவர் கூறவேண்டியவை**

நபி(ஸல்) அவர்கள் (தங்களின் மரணத்திற்கு முன் ஏற்பட்ட நோயின் பொழுது ஒரு முறை) என் மீது சாய்ந்தவர்களாக, **"அல்லாஹும்ம.ஃபிர்லீ வர்ஹம்னீ, வஅல்ஹிக்னீ பிர்ரபீகில் அ.ஃலா"** -இறைவா! என் மீது கருணை காட்டுவாயாக! என் பிழைகளை மன்னிப்பாயாக! மேலான நண்பனின் பக்கம் (உன் பக்கம்) என்னை சேர்த்தருள்வாயாக! என்று கூறியதை நான் செவிமடுத்தேன் என ஆயிஷா(ரலி) அவர்கள் அறிவித்தார்கள்.

***ஆதாரம் : புகாரி, முஸ்லிம்***

நபி(ஸல்) அவர்களின் மரணவேளையில் அவர்களின் அருகே ஒரு தண்ணீர் பாத்திரம் வைக்கப்பட்டிருந்தது. அதனுள் நபி(ஸல்) அவர்கள் தங்கள் கரத்தை விட்டுத் தண்ணீர் எடுத்து அதனைத் தங்கள் முகத்தில் தடவிக்கொள்வார்கள். பிறகு **"அல்லாஹும்ம அஇன்னீ அலா கமராதில் மவ்தி, வஸகராதில் மவ்த்"** இறைவா! மரணத்தின் வேதனைகளின் பொழுதும், மரணத்தின் ஸகராத் எனும் மயக்கங்களின் பொழுதும் நீ எனக்கு உதவி செய்வாயாக! என்று கூறுவார்கள். இதனை நான் கேட்டுள்ளேன் என ஆயிஷா(ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.

***ஆதாரம் : திர்மிதி***

**மரணம் நெருங்கிவிட்டவருக்கு "லாஇலாஹ இல்லல்லாஹ்" திருக்கலிமாவை ஞாபகப்படுத்த வேண்டும்.**

ஒருவருக்கு மரணம் நெருங்கிவிட்டதாக தெரிந்து கொண்டால் அவருக்கு திருக்கலிமாவை ஞாபகப்படுத்த வேண்டும். காரணம் அது மிகவும் கஷ்டமான நேரம், ஷெய்த்தானுடன் போராடும் நேரம். பக்கத்தில் இருப்பவர்கள் திருக்கலிமாவை ஞாபகப்படுத்துவதினால் மரணப்படுக்கையில் உள்ளவருக்கு அதை ஓதுவதர்க்கு வாய்ப்புக்கிடைக்கும், யார் கடைசி நேரத்தில் **"லாஇலாஹா இல்லல்லாஹு"** என்னும் கலிமாவை மொழிகின்றாரோ அவர் சுவர்க்கம் நுழைவார் என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

யாருடைய கடைசி வார்த்தை "லாஇலாஹ இல்லல்லாஹ்" திருக்கலிமா ஆகிவிடுகிறதோ, அவர் சுவர்க்கத்தில் நுழைவார் என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

***அறிவிப்பாளர் : முஅத்(ரலி)***
***ஆதாரம் : அபூதாவூது, ஹாகிம்***

உங்களில் மரணம் நெருங்கிவிட்டவர்களுக்கு "லாஇலாஹ இல்லல்லாஹ்" திருக்கலிமாவைச் சொல்லிக் கொடுங்கள் என நபி(ஸல்) கூறினார்கள்.

***அறிவிப்பாளர் : அபூ ஸயீதில் குத்ரீ(ரலி)***
***ஆதாரம் : முஸ்லிம்***

**மரணம் அடைந்துவிட்டவரின் கண்களை மூடி அவருக்கு பிரார்த்தனை செய்தல்**

என் கணவர் அபூ ஸலமா(ரலி) அவர்கள் மரணம் அடைந்த பொழுது நபி(ஸல்) அவர்கள் அங்கு வந்தார்கள். அப்போது என் கணவரின் கண்கள் திறந்திருந்தன. நபி(ஸல்) அவர்கள் இலேசாகக் கண்ணை கசக்கி மூடிவிட்டு உயிர் கைப்பற்றப்பட்டவுடன் (பிரிந்தவுடன்) பார்வை அதனை நோக்கியே இருக்கும் எனக்கூறினார்கள். இதனைக் கேட்ட அனைவரும் கதறி அழுதார்கள். நீங்கள் உங்களைப்பற்றி நன்மையான சொல்லையே உபயோகித்துக் கொள்ளுங்கள். ஏனெனில் நீங்கள் கூறுபவற்றுக்கு வானவர்கள் ஆமீன் கூறுகிறார்கள் எனக் கூறிவிட்டு பின்வரும் பிரார்த்தனைகளைச் செய்தார்கள்.

"இறைவா! அபூஸலமாவின் பிழைகளைப் பொறுப்பாயாக! நேர்வழி பெற்றவர்களில் அவரின் அந்தஸ்தை உயர்த்துவாயாக! அவரின் வாரிசுகளுக்கு நீயே சிறந்த பிரதிநிதியாக இருப்பாயாக! அகிலங்களின் அதிபதியே! எங்களுக்கும் அவருக்கும் பிழை பொறுப்பாயாக! அவரின் மண்ணறையை விஸ்தீரணமாக்கி வைப்பாயாக! அவரின் மண்ணறையை ஒளிமயமாக்கி வைப்பாயாக!" என அவருக்காக துஆச் செய்தார்கள்.

***அறிவிப்பாளர் : உம்மு ஸலமா(ரலி)***
***ஆதாரம் : முஸ்லிம்***

**ஒருவர் மரணித்ததும் அவருக்காகச் செய்யும் கடமைகள்**

ஒருவர் மரணித்தால் அவரைக் குளிப்பாட்டி கபனிட்டு அவருக்காக தொழுகை நடத்தி நல்லடக்கம் செய்வது மற்ற முஸ்லிம்களின் கடமையாகும். அதே போல் அவருடைய கடன்களை கொடுத்து அவருடைய வஸிய்யத்தையும் நிறைவேற்ற வேண்டும். இவைகளில் ஒவ்வொன்றையும் விரிவாகப் பார்ப்போம்.

**மையித்தைக் குளிப்பாட்டுதல்**

ஒருவர் இறந்துவிட்டால் மற்ற முஸ்லிம்கள் அவரைக் குளிப்பாட்டுவது கடமையாகும். அதைத் தாமதமின்றி அவசரப்படுத்த வேண்டும். குளிப்பாட்டுவதற்கு பின்வரும் ஒழுங்குகளைக் கவனிக்க வேண்டும்.

1. மூன்று முறை குளிப்பாட்ட வேண்டும். தேவைப்படும் போது அதிகப்படுத்திக் கொள்ளலாம்.

2. ஒற்றைப்படையாக குளிப்பாட்ட வேண்டும்.

3. குளிப்பாட்டும் பொழுது இலந்தை இலை அல்லது உடம்பை சுத்தப்படுத்தக்கூடிய சோப்பு போன்றவற்றை பயன்படுத்த வேண்டும்.

4. கடைசியாக குளிப்பாட்டும் தண்ணீரில் ஏதாவது வாசனைப் பொருட்களைச் சேர்த்துக் கொள்ள வேண்டும், கற்பூரத்தைக் கலப்பது சிறந்ததாகும். (இஹ்ராம் அணிந்தவரை குளிப்பாட்டும் போது மணத்திரவியங்களை கட்டாயம் தவிர்க்க வேண்டும்)

5. பெண் மைய்யித்தின் கொண்டை முடிகளை அவிழ்த்து விட்டு நன்றாகக் கழுவ வேண்டும்.

6. தலைமுடியைத் தொங்க விட வேண்டும்.

7. பெண்களுக்கு மூன்று பின்னல் போட்டுப் பின்னால் தொங்க விட வேண்டும்.

8. வலது பக்கத்திலிருந்து குளிப்பாட்டுதலை ஆரம்பிக்க வேண்டும்.

9. (ஏதாவது நிர்பந்தம் ஏற்பட்டாலே தவிர) ஆணை ஆண்களும் பெண்ணைப் பெண்களும் குளிப்பாட்டுதல்

வேண்டும். (கணவன் மனைவி இதில் விதிவிலக்குப் பெற்றவர்கள்)

பின்வரும் ஹதீஸ் இவைகளுக்கு ஆதாரமாக இருக்கின்றது.

நாங்கள் நபி(ஸல்) அவர்களின் மகள் ஜைனபைக் குளிப்பாட்டிக் கொண்டிருக்கும் போது நபியவர்கள் வந்து மூன்று முறை குளிப்பாட்டுங்கள் அல்லது ஐந்து முறை அல்லது ஏழு முறை குளிப்பாட்டுங்கள் தேவையானால் அதிகப்படுத்திக் கொள்ளுங்கள் என்று கூறினார்கள். ஒற்றைப்படையாகத்தான் இருக்க வேண்டுமா? என்று கேட்டேன். ஆம்! அப்படியேதானிருக்க வேண்டும் என்று கூறிவிட்டு கடைசியாக கற்பூரத்தைக் கலந்து கொள்ளுங்கள். குளிப்பாட்டி முடிந்தவுடன் என்னை அழையுங்கள் என்று நபியவர்கள் கூறினார்கள். குளிப்பாட்டி முடிந்தவுடன் நாங்கள் நபி (ஸல்) அவர்களை அழைத்தோம். எங்களை நோக்கி வந்த நபி (ஸல்) அவர்கள் தங்கள் கைகளிலிருந்த சாரத்தை (துணியை) எங்களிடம் வீசி இதனை உள்ளாடையாக உடுத்தி விடுங்கள் என்றார்கள். நாங்கள் அதனை உடுத்தி விட்டு அவரின் தலைமுடியை மூன்றாகப் பிரித்து பின்னி முதுகுப் பக்கம் போட்டுவிட்டோம். எல்லா வேலைகளிலும் வலப் பக்கத்தையே முற்படுத்துங்கள்! ஒளுவின் உறுப்புக்களையும் அவ்வாறே செய்யுங்கள் என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

**யாருடைய கடைசி வார்த்தை "லாஇலாஹ இல்லல்லாஹ்" திருக்கலிமா ஆகிவிடுகிறதோ, அவர் சுவர்க்கத்தில் நுழைவார் என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்...**

**உங்களில் மரணம் நெருங்கிவிட்டவர்களுக்கு "லாஇலாஹ இல்லல்லாஹ்" திருக்கலிமாவைச் சொல்லிக் கொடுங்கள் என நபி(ஸல்) கூறினார்கள்...**

***அறிவிப்பவர்: உம்மு அதிய்யா(ரலி)***

***ஆதாரம் : புகாரி, முஸ்லிம்***

10. ஜனாஸாவின் ஆடைகளைக் களைந்துவிட்டு ஆண் ஆண்களுடன் இருக்கும் போது மறைத்திருக்க வேண்டிய மர்மஸ்தானங்களையும், பெண் பெண்களுடனிருக்கும் போது மறைத்திருக்க வேண்டிய மர்மஸ்தானங்களையும் துணியால் மறைத்துவிட்டு கையில் ஒரு துணியை சுத்திக் கொண்டு மையித்தைக் கழுவவேண்டும்.

பின்வரும் ஹதீஸ் இதைத் தெளிவு படுத்துகின்றது.

நபி (ஸல்) அவர்களைக் குளிப்பாட்டத் தொடங்கியபோதே "நாம் வழமையாக மரணித்தவரின் ஆடைகளைக் களைந்து விட்டுக் குளிப்பாட்டுவது போல இறைத்தூதரின் ஆடைகளையும் களைந்து குளிப்பாட்டுவதா? அல்லது ஆடையுடனேயே நபியவர்களை குளிப்பாட்டுவதா? என்று தோழர்கள் தர்க்கித்துக் கொண்டிருந்தார்கள். இவர்கள் இவ்வாறு தர்க்கித்துக் கொண்டிருந்த போது அவர்களுக்கு அல்லாஹ் தூக்கத்தை உண்டாக்கினான். தோழர்கள் எல்லோரும் அந்த இடத்திலேயே உட்கார்ந்து உறங்கிவிட்டார்கள். எல்லோருடைய தாடியும் நெஞ்சின் மீது படிந்தது. பின்பு அடையாளம் காணமுடியாத ஒருவர் வீட்டுக்குப பக்கத்தில் நின்று கொண்டு ""நபியவர்கள் உடுத்திருக்கும் ஆடையுடனேயே குளிப்பாட்டுங்கள்" என்று கூறினார். திடுக்கிட்டு எழுந்த தோழர்கள் நபியவர்களின் ஆடைகளைக் களையாது ஆடைக்கு மேலாக தண்ணீர் ஊற்றி நபியவர்கள் அணிந்திருந்த ஆடையினாலேயே உடலைத் தேய்த்துக் குளிப்பாட்டினார்கள். நபியவர்களைக் குளிப்பாட்டும் வேலைக்கு நான் முந்தியிருந்தால் நபியவர்களின் மனைவியரைத்தவிர வேறு யாரும் நபியவர்களைக் குளிப்பாட்ட விட்டிருக்கமாட்டேன் என அன்னை ஆயிஷா (ரலி) அவர்கள் கூறினார்கள்.

***ஆதாரம் : அபூதாவூத், இப்னு மாஜா,பைஹகி,அஹ்மத்***

11. குளிப்பாட்டும் முறைகளை நன்கு அறிந்தவர்கள் குளிப்பாட்ட வேண்டும். குறிப்பாக செந்தக் காரர்கள் குளிப்பாட்டுதல் வேண்டும். ஏனெனில் நபியவர்களை குளிப்பாட்டும் பணியில் நபியவர்களின் குடும்பத்தினரே ஈடுபட்டிருந்தனர். அவர்களிலொருவர்தான் அலி(ரலி) அவர்கள். அவர்கள் கூறுவதாவது ""நான் நபி(ஸல்) அவர்களைக் குளிப்பாட்டினேன், ஏனைய மையித்துகளுக்கு ஏற்படும் எந்த அசுத்தமும், அசிங்கமும் ஏற்பட்டதை நான் காணவேயில்லை. உயிருடன் இருக்கும் போதும் இறந்த பின்பும் தூய்மையானவர்களாகவே இருந்தார்கள்.

***ஆதாரம் : இப்னு மாஜா, ஹாகிம், பைஹகி***

**இரண்டு நிபந்தனைகளுடன் குளிப்பாட்டுபவருக்கு அதிக நற்கூலிகள் உண்டு**

1. குளிப்பாட்டுபவர் மையித்தில் ஏதாவது குறைகளைக் கண்டால் யாரிடமும் அதைக் கூறாமல் மறைக்க வேண்டும்.

ஒரு முஸ்லிமை குளிப்பாட்டி அவரிலுள்ள குறைபாடுகளை வெளியிடாது மறைத்துக் கொண்டால் நாற்பது முறை குளிப்பாட்டியவனை அல்லாஹ் மன்னிக்கிறான். கப்ரு தோண்டியவருக்கு நல்லிருப்பிடத்தை மறுமை வரை அளிக்கின்றான். கபனிட்டவருக்கு அல்லாஹ் மறுமையில் சுவர்க்கத்தில் மெல்லிய அழுத்தமான ஆடைகளை அணுவிக்கிறான் என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

***ஆதாரம் : பைஹகி, ஹாகிம்***

2. குளிப்பாட்டுவதற்கும்,கபனிடுவதற்கும், கப்ரு தோண்வதற்கும் எவ்வித கூலியையும் எதிர் பார்க்காமல் அல்லாஹ்வின் திருப்பொருத்தத்திற்காகவே செய்ய வேண்டும்.

**நபியே! நீர் கூறுவீராக: நிச்சயமாக நான் உங்களைப் போன்ற ஒருமனிதனே! நிச்சயமாக உங்களுடைய இறைவன் ஒரே இறைவன்தான் என்று எனக்கு வஹீ அறிவிக்கப்பட்டிருக்கிறது. எவன் தன்னுடைய**

---

உங்களுக்குத் தெரியுமா?

## விடைகள்

1. **Association Of South East Asian Nation**
2. அமெரிக்கா-**(Federal reserve Bank)**
3. விருந்தோம்பலின் காரணமாக
4. ஆகஸ்ட் - 6
5. மால்கம்-X என்ற மாலிக் அல் ஷாபாஸ்
6. அபுல் ஹஸன் நத்வி
7. ஷிர்க் (இறைவனுக்கு இணைவைப்பது)
8. மௌலானா அபுல் கலாம் ஆஸாத்
9. டாக்டர் சன்யாட் சென்
10. நிப்போன் **(Nippon)**

**இறைவனை சந்திக்க ஆதரவு வைக்கிறானோ அவன் (ஸாலிஹான) நல்ல செயல்களைச் செய்து, தன் இறைவனை வணங்குவதில் வேறெவரையும் இணையாக்காதும் இருப்பானாக.**

***அல் குர்ஆன் 18:110***

இந்த வசனத்தில்

"தன் இறைவனுக்கு ஒருவரையும் இணையாக்காது அவனையே வணங்கி வருவானாக! என்ற சொல்லின் கருத்து அல்லாஹ்வின் திருப்பொருத்தத்திற்காகவேயன்றி எந்த வணக்கத்தையும் செய்யக் கூடாது என்பதாகும்.

செயல்கள் அனைத்தும் எண்ணங்களைக் கொண்டே நிர்ணயிக்கப்படுகின்றன" என்பது நபி மொழியாகும்.

***ஆதாரம் : புகாரி, முஸ்லிம்***

இவ்விரு ஆதாரத்தின் அடிப்படையில் எந்த அமலும் அல்லாஹ்விடத்தில் ஏற்றுக் கொள்ளப்படுவதற்கு தூய எண்ணம் அவசியம் என்பது தெளிவாகின்றது.

**மையித்தை குளிப்பாட்டியவர் குளிப்பது சுன்னத்தாகும்**

எவர் மையித்தை குளிப்பாட்டினாரோ அவர் குளிக்கட்டுமாக! எவர் மயித்தை சுமந்து சென்றாரோ அவர் ஒளுச் செய்யட்டுமாக! என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். (அபூதாவூத், திர்மிதி)

இந்த நபிமொழியின் கருத்தை வெளிப்படையாகப் பார்க்கும் போது மையித்தை குளிப்பாட்டியவர் குளிப்பதும், சுமந்து சென்றவர் ஒளுச் செய்வதும் கடமை போல் தெரிகின்றது. ஆனால் வேறு இரண்டு நபிமொழிகளை பார்க்கும் போது இது கடமையில்லை என்பது புலனாகின்றது.

1. உங்களொருவரின் மையித்தை குளிப்பாட்டுவதால் நீங்கள் குளிக்க வேண்டியதில்லை. மையித்து நஜீஸ் அல்ல. நீங்கள் கைகளை மட்டும் கழுவிக் கொண்டால் போதும் என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

***ஆதாரம் : ஹாகிம், பைஹகி***

2. நாங்கள் மையித்தை குளிப்பாட்டுவோம். அதற்குப பிறகு சிலர் குளிப்பார்கள். சிலர் குளிக்கமாட்டார்கள் என இப்னு உமர்(ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்.

***ஆதாரம் : தாரகுத்னி***

**அல்லாஹ்வின் பாதையில் ஷஹீதானவரை குளிப்பாட்டக்கூடாது**

(போரில் ஷஹீதானவர்களை) அவர்களின் இரத்தத்துடனேயே அடக்கம் செய்யுங்கள். அல்லாஹ்விற்காக போரிட்டு மரணித்தவர்கள் அவர்களின் பாயத்திலிருந்து அரத்தம் ஓடக்கூடிய நிலையில் மறுமையில் வருவார்கள். இரத்தம் இரத்த நிலையிலேயே இருக்கும். ஆனால் அதன் வாடை கஸ்தூரி மணமாக இருக்கும் என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

***ஆதாரம் : புகாரி, அபூதாவூத், நஸாயி***

***தொடரும் இன்ஷா அல்லாஹ்***

☆ ☆ ☆

# இந்து மதத்திலிருந்து இஸ்லாத்தை நோக்கி...

அல்லாஹ்வின் கருணையினால் ஆசீர்வதிக்கப்பட்ட முஹம்மது உமர் ராவ் ஆகிய நான் ஒரு இந்தியக் குடிமகன். நான் என்னுடைய 18ஆவது வயதில் இஸ்லாத்தைத் தழுவி இன்றுடன் 6 வருடம் பூர்த்தியாகிவிட்டன. நான் என்னுடைய வாழ்க்கை விபரங்களை உங்கள் அனைவருடனும் பகிர்ந்து கொள்ள விருப்பப்படுகிறேன். முஸ்லிம் அல்லாதவர்களும் இதைப் பார்த்து உண்மையைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதும் என்னுடைய ஆசை. என்னுடைய வாழ்க்கைமுறையை இரண்டு நண்பர்களுடன் பகிர்ந்து கொண்ட போது அவர்கள் என்னுடைய தேர்வு மற்றும் முடிவு மிகச் சிறந்தது என்று உற்சாகப்படுத்தினார்கள்.

**வாழ்க்கை முறை**

நான் நடுத்தர வகுப்பைச் சார்ந்த ஆச்சாரமான பிராமணக் குடும்பத்தைச் சேர்ந்தவன். என்னுடைய தந்தை இன்ஜினியாராகவும், தாய் ஆசிரியையாகவும் உள்ளனர். என் தாய் மாமன் வீட்டில் தங்கியிருந்துதான் மதச் சம்மந்தமான கல்வியை நான் கற்றேன். என்னுடைய குடும்பத்தில் உள்ளவர்கள் அனைவரின் கல்வியும் முஸ்லிம்களுக்கு எதிராகவே இருந்ததால் முஸ்லிம்களைப் பற்றிய ஒரு தவறான எண்ணம் என்னுடன் ஆணி அடித்தது போல் இருந்தது. சிலகாலம் RSSஉடன் சேர்ந்திருந்ததால் நான் எப்பொழுதுமே முஸ்லிம்களை வெறுக்கின்றவனாகவே இருந்து வந்தேன். பள்ளிவாசலில் பாங்கு சொல்லும் போது நான் கேட்டுக் கொண்டிருக்கும் இசையின் சப்தத்தை அதிகப்படுத்தி அந்த பாங்கு சப்தம் என்னுடைய காதில் விழாதபடி செய்வேன். நகரத்தில் இருக்கும் எல்லா கோயில்களுக்கும் தினந்தோறும் சென்று வழிபாடு செய்பவனாக இருந்து வந்தேன், இதற்காக என் வீட்டினர் அனைவரும் என்னை உற்சாகப்படுத்துவார்கள்.

**இஸ்லாத்துடன் பரிச்சயம்**

ஒரு கோடை விடுமுறையில் ஒரு முஸ்லிமின் வியாபார நிர்வாகத்தில் வேலை செய்யச் சொல்லி என் தாய் என்னை அழைத்தார்கள். அதற்கு நான் சம்மதிக்கவில்லை, ஏனென்றால் குழந்தைப் பருவத்தில் இருந்தே முஸ்லிம்களை நான் வெறுத்து வந்தேன். என்னுடைய நிலையை அறிந்த என் தாய் மேற்கொண்டு என்னை வற்புறுத்தவில்லை. சில கோடை விடுமுறைகளில் முஸ்லிம் அல்லாத வியாபார நிர்வாகத்தில் நான் வேலை செய்து வந்தேன். ஆதலால் என்னுடைய தாய், தந்தை இருவரும் திருப்தி அடைந்தனர். சில காலம் கழிந்து அந்த பகுதி நேர வேலையை விட்டுவிட்டு என்னுடைய படிப்பில் கவனமானேன். மேற்கொண்டு நல்ல வேலை கிடைக்க வேண்டும் என்பதற்காக என்னுடைய தாய் மற்றும் தங்கைகள் ஒரு முஸ்லிம் நிறுவனத்தில் 2 மாதம் தற்காலிகமாக பணியாற்றினார்கள், அந்த 2 மாதத்தில் முஸ்லிம்களின் பழக்க வழக்கங்கள் எனது தாய் மற்றும் தங்கைகளுக்கு மிகவும் பிடித்துவிட்டது.

நான் வெறுக்கும் முஸ்லிம்களுக்கு ஆதரவாக யாராவது பேசினாலே எனக்கு கோபம் வந்துவிடும், அப்படிப்பட்ட சூழ்நிலையில் இருந்து வந்த நான் எனது தாய் மற்றும் தங்கைகளின் நிர்ப்பந்தத்தில் சில முஸ்லிம் நண்பர்களுடன்

சேர்ந்து வேலை செய்யும் நிலைக்கு ஆளானேன். வேண்டா வெறுப்பாக அந்த கடையில் வேலைக்குச் சேர்ந்த நாள் முதல் முஸ்லிம்களின் மேல் உள்ள வெறுப்பு இன்னும் அதிகமானது ஏனென்றால், அந்தக் கடையில் வேலை செய்யும் முஸ்லிம் அல்லாதவர் பல பேர் இஸ்லாத்தைத் தழுவியிருந்தார்கள். இஸ்லாத்திற்கு ஏன் அனைவரும் இப்படி முக்கியத்துவம் தருகிறார்கள் என்று எண்ணி என்னுடைய இந்து மதம் தான் சிறந்தது, உயர்ந்தது என்று அவர்களுக்கும் புரிய வைக்க வேண்டும் என்பதற்காக, இந்து மதத்தையும், இஸ்லாத்தையும் ஒப்பிட்டுப் பார்க்க ஆரம்பித்தேன். அத்தருணத்திலிருந்து இஸ்லாத்தைப் பற்றி அதிகமாகத் தெரிந்து கொள்ள ஆசைப்பட்டதால் குர்ஆனின் ஆங்கில மொழியாக்கத்தை படிக்க ஆரம்பித்தேன். படித்து அதன் அர்த்தத்தை நல்லபடியாக தெரிந்து யோசிக்க ஆரம்பித்த என்னுடைய மாணவப் பருவ வாழ்க்கை முற்றிலும் மாறிப்போனது. அதன் பிறகு நான் என்னென்ன தவறுகள் இதுவரை செய்துக் கொண்டு இருக்கின்றேன் என்பதைப்பற்றி கவலை மற்றும் பயம் வந்தது. என்னுடைய இந்து மதம் முழுவதும் கற்பனை மற்றும் புராணங்களாலும், கட்டுக் கதைகளாலும்தான் நிரம்பி உள்ளது என்று தெரிய வந்தது. அதைத் தொடர்ந்து பல கேள்விகளும் சந்தேகங்களும் என்னுள் எழுந்தது. என்னுடைய கடமை என்ன? நான் எப்படி இருக்க வேண்டும்? என்ன செய்ய வேண்டும்? ஏன் இந்த உண்மையான கருத்து எங்களில் பல பேருக்கு வந்து சேரவில்லை? இதைப் போல பல கேள்விகளுக்கு உண்மை மற்றும் பதில் தெரிந்து கொள்வதில் என்னுடைய மீதி மாணவப் பருவத்தை செவழிக்க ஆரம்பித்தேன்.

என்னுடைய பெற்றோர்களையும் என்னைச் சுற்றி இருப்பவர்களையும் நான் கேட்டேன், கடவுளை நேரில் பார்த்தவர்கள் யாராவது உள்ளார்களா? எந்த அடிப்படையில் படங்களையும், சிலைகளையும் உருவாக்குகிறார்கள்? கடவுளை யாரும் பார்த்ததில்லை என்பதுதான் அவர்கள் அனைவரின் பதிலுமாய் இருந்தது. இறுதியில் நான் சில புராணங்களை படித்ததின் மூலம் உண்மையை உணர முடிந்தது. அதன் பிறகு இந்து கடவுள்களின் கதைகள் என்னை அந்த அளவிற்கு பாதிக்கவில்லை.

நான் என் பெற்றோர்களிடம் மீண்டும் கேட்டேன். எல்லா இந்து வேதங்களும் சிலை வணக்கங்களை எதிர்க்கின்றன. இருப்பினும் நாம் தொடர்ந்து அதைச் செய்துக் கொண்டிருக்கிறோம். ஏன்? எந்த அடிப்படையில் சிலை வணக்கம் செய்கிறோம். இந்த கேள்வியால் என் பெற்றோர்கள் என் மேல் கோபப்பட்டு நமது முன்னோர்கள் செய்து கொண்டிருந்ததைத்தான் நாம் தொடர்ந்து செய்கிறோம் என்று சொன்னார்கள். இந்த பதிலால் நான் திருப்தியடையவில்லை.

அடுத்து நான் குர்ஆன் படித்தபோது அத்தியாயம் அல்பகராவில் ஒரு வசனம் என்னை மிகவும் பாதித்து அதிர்ச்சிக்குள்ளாக்கியது.

**மேலும், "அல்லாஹ் இறக்கி வைத்த இ(வ்வேதத்)தைப் பின்பற்றுங்கள் என்று அவர்களிடம் கூறப்பட்டால், அவர்கள் "அப்படியல்ல! எங்களுடைய மூதாதையர்கள் எந்த வழியில் (நடக்கக்) கண்டோமோ, அந்த வழியையே நாங்களும் பின்பற்றுகிறோம்" என்று கூறுகிறார்கள் என்ன! அவர்களுடைய மூதாதையர்கள், எதையும் விளங்காதவர்களாகவும், நேர்வழிபெறாதவர்களாகவும் இருந்தால் கூடவா?**

***அல்-குர்ஆன் 2:170***

இந்த வசனம் என்னை மிகவும் பாதித்தது. அதன் பிறகு சிலை வணக்கங்களையும், பூஜைகள் செய்வதையும் சிறிது சிறிதாக நிறுத்தினேன்.

அல்லாஹ்வுடன் மற்றவர்கள் இணை வைப்பது என்பது மன்னிக்க முடியாத குற்றம் என்பதை உணர்ந்தேன்.

ஆரம்ப நாட்களில் மிகவும் ரகசியமாக இஸ்லாத்தைப் பற்றி படிக்க ஆரம்பித்தேன். அல்பகரா அத்தியாயத்தில் அல்லாஹ் மேலும் தெளிவுபடுத்துகின்றான், என்னவென்றால்

**இன்னும் (இந்தப் போலி விசுவாசிகள்) ஈமான் கொண்டிருப்போரைச் சந்திக்கும் போது, "நாங்கள் ஈமான் கொண்டிருக்கிறோம்" என்று கூறுகிறார்கள் ஆனால் அவர்கள் தங்கள் (தலைவர்களாகிய) ஷைத்தான்களுடன் தனித்திருக்கும்போது, "நிச்சயமாக நாங்கள் உங்களுடன்தான் இருக்கிறோம், நிச்சயமாக நாங்கள் (அவர்களைப்) பரிகாசம் செய்பவர்களாகவே இருக்கிறோம்" எனக் கூறுகிறார்கள்**

***(அல் குர்ஆன் 2 :14***

அதைத்தொடர்ந்து ஆல இம்ரான் அத்தியாயத்தில் அல்லாஹ் விளக்குவது என்னவென்றால்

**..இன்னும் உங்களுக்காக நான் இஸ்லாம் மார்க்கத்தையே (இசைவானதாகத்) தேர்ந்தெடுத்துள்ளேன்..**

***(அல் குர்ஆன் 5 : 3)***

இதன் பிறகு நான் மேலும் தெளிவடைந்தேன். என் மனதில் இருந்த எல்லாக் கேள்விகளுக்கும் விடை இந்த குர்ஆனில் மட்டும் தான் கிடைத்தது.

அல்லாஹ்வின் கிருபையினால் இஸ்லாத்தைப் பற்றி எனக்குத் தெரிந்த மற்றும் அறிந்த சில விபரங்களை நான் என் வீட்டில் உள்ளவர்களிடம் தெரியப்படுத்தினேன்.

டிப்ளமோ கடைசி ஆண்டு படிக்கும் காலத்தில் இஸ்லாத்திற்கு கொஞ்ச கொஞ்சமாக நான் மாறிக் கொண்டிருப்பதைப் பார்த்து என் பெற்றோர்கள் என்னை வீட்டை விட்டு அனுப்பிவிட்டனர். ஆனால் என் சகோதரி இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டு என்னுடன் வெளியே வந்துவிட்டார். நானும் எனது சகோதரியும் வீட்டை விட்டு வெளியே வந்து ஒரு வருடம் எந்த வேலையும் இல்லாமல், எந்தவித வருமானமும் இல்லாமல் மிகவும் சிரமத்திற்குள்ளானோம். அந்த நேரத்திலும் இஸ்லாத்தில் உள்ள பற்று எங்களுக்குக் குறையாமல் மிகவும் ஈமானுடன் இருந்ததால் அல்லாஹ் எங்களுடைய எல்லா சிரமங்களையும் இலேசாக்கினான், அல்ஹம்துலில்லாஹ்.

மிகவும் குறைந்த வருமானத்தில் கிடைத்த வேலைக்கு நாங்கள் இருவரும் சென்று கொண்டிருந்தோம்.

இதற்காக எல்லா சிரமங்களையும் தாங்கிக் கொண்டேன். அல்லாஹ் நல்ல சந்தர்ப்பங்கள் எல்லாம் எங்களுக்கு அதிகமாக ஏற்படுத்திக் கொடுத்தான். ஐந்து வேளை தொழ முடியாத காரணத்தால் நான் என்னுடைய முந்தைய வேலையிலிருந்து விடுபட்டேன். கொஞ்ச கொஞ்சமாக பல பெரிய தொழிற்சாலைகளின் வேலைவாய்ப்புகளை நான் இழக்கும்படி ஆகிவிட்டது. இதற்காக நான் வருத்தப்பட்டாலும் அல்லாஹ்வின் கருணையினால் தற்போது நல்ல வேலை கிடைத்ததுடன் ஐந்து வேளை நல்லபடியாக தொழுகவும் முடிகிறது. எல்லாப் புகழும் இறைவனுக்கே!

***தொகுப்பு : கோவை. பஷீர்***

# குறுக்கெழுத்துப் போட்டி - 2:8

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ■ | | 1 | 2 | | | | ■ |
| | 3 | | | 4 | | | 5 |
| | | | | | 6 | | 7 |
| | | | | 8 | | | |
| | | | | ■ | | 9 | |
| | | | 10 | ■ | | | |
| | 11 | | | | ■ | | |
| 12 | | | 13 | | | | 14 |

**இடமிருந்து வலம்**

2. சுவனப் பெண்மணிகளின் தலைவி (4)
4. நபி(ஸல்) அவர்களின் மகள்களில் ஒருவர் (3)
8. துன்னூரைன் இந்நபித் தோழரின் மற்றொரு பெயர் - அதிகவெட்கப்படக்கூடிய நபித்தோழர் (4)
11. இந்நபித்தோழரின் மரணம் குறித்து நபி(ஸல்) அவர்கள் முன்னறிவிப்புச் செய்திருந்தார்கள் - இவரின் பெற்றோர்களும் ஷஹீதாக்கபட்டார்கள் (4)

**வலமிருந்து இடம்**

5. வெட்கத்தை அரபியில் இப்படிக் கூறுவர் (2)
7. அபூபக்ர்(ரலி) அவர்களின் ஆட்சி காலத்தில் ரோமானியர்களை எதிர்த்து போரிட்ட யுத்தம் (4)
13. சவூதி அரேபியாவின் பிரதான நகரங்களில் ஒன்று "ராயல் கமிஷன்" இங்கு உள்ளது (3)
14. குறைஷியர்களுடன் நபி(ஸல்) அவர்கள் செய்த உடன்படிக்கையின் பெயர் (5)

**மேலிருந்து கீழ்**

1. நி∴பாக் என்பதின் தமிழ் பதம் (7)
3. பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ரஹீம் எனத் துவங்காத குர்ஆனிய அத்தியாயம் (5)
6. ஹதீஸ் கிரந்தத்தின் பெயர் (4)
9. ஹப்ஸா(ரலி) அவர்களின் தந்தை – நான்கு கலீபாக்களில் ஒருவர் (3)

**கீழிலிருந்து மேல்**

3. ஸி∴ப்பீன் போர் இவர் ஆட்சி காலத்தில் நிகழ்ந்தது(2)
10. ஹதீஸ்களை மறக்காதிருக்க நபி(ஸல்) அவர்கள் உபாயம் கூறிய நபித்தோழர் (5)
12. மார்க்கத்தில் அதிக விளக்கமளிக்க நபி(ஸல்) துஆ செய்த நபித்தோழர்(7)
14. அல்லாஹ் தன் அருள்மறையில் கண்ணழகிகள் என கூறும் சுவனப் பெண்கள் (5)

## விதிமுறைகள்

**1.** விடைகளை தனித்தாளில் எழுதி உறையிலிட்டு ஸனாய்யியா இஸ்லாமிய அழைப்பகத்தில்(புதியது) நேரடியாகக் கொடுத்துவிடலாம். தபால் மூலம் அனுப்புவோர்

**Mr. K.L.M. Ibrahim(Madani), Tamil Division, P.O.Box-32628,Jeddah-21438**

அல்லது **suvanam@gmail.com** என்கிற முகவரிக்கு **ஜமாத்துல் அவ்வல்** மாதம் **30**-ஆம் தேதிக்குள் கிடைக்குமாறு அனுப்பவேண்டும்.

**2.** விடைகளை தனித்தாளில் தெளிவாக கேள்வி எண் மற்றும் இடமிருந்து வலம், வலமிருந்து இடம், மேலிருந்து கீழ் மற்றும் கீழிலிருந்து மேல் ஆகியவைகளை குறிப்பிட்டு எழுத வேண்டும்.

**3.** நீங்கள் அனுப்பும் உறையில் உங்கள் பெயர் மற்றும் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி மற்றும் தொலைபேசி எண்ணை மறவாமல் குறிப்பிடவும்.

**4.** ஒன்றுக்கு மேற்பட்டோர் சரியான விடைகளை எழுதியிருந்தால் குலுக்கல் முறையில் பரிசு வழங்கப்படும்.

**5.** பரிசு பெற்றவர்கள் விபரம் மற்றும் விடைகள் ஒரு மாதம் விட்டு அடுத்த மாத இதழில் வெளிவரும்.

**6.** ஆசிரியர் முடிவே இறுதியானது.

## குறுக்கெழுத்துப் போட்டி – 2:6 க்கான பரிசு பெறுபவர் விபரம்

### N. ஷேக் அலாவுதீன்

பரிசு பெற்றவர் **மௌலவி. இப்ராஹீம் மதனி** அவர்களைத் தொடர்பு கொண்டு பரிசை பெற்றுக்கொள்ளவும் – (050 6625229)

குறுக்கெழுத்துப் போட்டியில் ஆர்வத்தோடு கலந்து கொண்டு சிறப்பித்த அனைத்து வாசகர்களுக்கும் நன்றி.

## குறுக்கெழுத்துப் போட்டி – 2:6 க்கான விடைகள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| யா | ஷி | னே | தோ | ந் | இ 1 | ■ | 2 ர |
| 3 ஷி | ரே | சீ | ல் | 4 ஜீ | ந் | 5 தர் | ஷ் |
| லே | ய் | பா | 6 து | னா | தி | ய் | யா |
| 7 ம | மெ | ரி | க் | கா | யா | லா | லி |
| ல் | ■ | ன் | ரா | 8 ஈ | ல் | ந் | ரே |
| ல் | ■ | ■ | 9 ஈ | ■ | ல் | து | தி |
| 10 ல் | 11 எ | கி | ப் | து | 12 ல் | ல் | ஸ் |
| 13 = | ல | ங் | கா | க் | ரி | ப் | 14 ஆ |